CTM/BKS/39

(39)

# கட்டிளமைப்பருவக் கர்ப்பங்கள்

# குடும்பக் கட்டுப்பாடு

# பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள்

வெளியீடு:
கல்வி வெளியீட்டுப் பிரிவு,
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# கட்டிளமைப் பருவக் கர்ப்பங்கள் ஆபத்தானவை!

## கட்டிளமைப் பருவக் கர்ப்பத்தின் முக்கியத்துவம் என்ன?

20 வயதிற்குக் குறைந்த பெண், உடல், உள ரீதியில் தாயாவதற்கு முழுமையான விருத்தியை அடையாததால் இக்கர்ப்பம் ஆபத்து நிறைந்ததாகும்.

## கட்டிளமைப் பருவக் கர்ப்பத்திற்கான காரணங்கள்

- சிறுவயதுத் திருமணங்கள்
- திருமணத்திற்கு முந்திய பாலியல் தொடர்புகள்
- கர்ப்பம் ஏற்படுவது தொடர்பான அறிவின்மை.
- கர்ப்பத்தடைகள் தொடர்பான அறிவின்மை.
- பாலியல் துஷ்பிரயோகங்கள்

## தாய்க்கு ஏற்படும் பாதிப்புக்கள்

- அதிகரித்த அளவில் கர்ப்பகால குருதிச்சோகை, கர்ப்பகால உயர்குருதியமுக்கம், கர்ப்பகால நீரிழிவு நோய்களின் தாக்கம்.
- கர்ப்பப்பை போதிய வளர்ச்சியுறாததால், போதிய சிசு வளர்ச்சி ஏற்படாது, இதனால் சிசு விருத்தி சீராக இராது. எனவே குறைபாடுகள் உள்ள குழந்தை பிறத்தல்.
- கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பு அதிகம்
- தாயின் பிறப்புக்கால்வாய், இடுப்பு என்புகள் போதிய வளர்ச்சி அடையாதிருப்பதால் பிரசவச் சிக்கல்கள் ஏற்படலாம். இதனால் சத்திரசிகிச்சை பிரசவத்திற்கான சாத்தியக்கூறு களும், அதனால் ஏற்படும் மேலதிக பிரச்சனைகளும்.

## சிசுவில் ஏற்படும் பாதிப்புக்கள்

- பூரண வளர்ச்சியடையாத குழந்தைப்பேறு
- நிறை குறைந்த பிரசவம்
- சிசு மரணம்
- சிசுவில் பாலியல் நோய்களின் தாக்கம்
- தாய் சரியான போசாக்குள்ள உணவுகள், இரும்பு, போலிக்கமில மாத்திரை உட்கொள்ளாததால் குறைபாடு களுள்ள மற்றும் மூளை விருத்தி குறைந்த குழந்தைகள் பிறக்கும் சாத்தியம் அதிகம்.

## சட்டவிரோதக் கருக்கலைப்பும் அதன் விளைவுகளும்

- குருதியினுள் கிருமித் தொற்றுகை
- வலிப்பு ஏற்படல்
- அதிகளவு குருதி வெளியேற்றம்
- தொடர்ச்சியான கருச்சிதைவு
- இடுப்புக்கூட்டு அழற்சி
- கருப்பைக்கு வெளியே குழந்தை தங்குதல்
- நிரந்தர மலட்டுத் தன்மை
- இறப்பு

**சட்டவிரோதக் கருக்கலைப்பை நாடுதல்**
**தாய்க்கு உயிராபத்தை விளைவிக்கும்!**

## தேவையற்ற கர்ப்பம்

திருமணமான அல்லது திருமணமாகாத ஒரு பெண் தான் கர்ப்பவதியாவதை விரும்பாத ஒரு சமயத்தில் எதிர்பாராதவிதமாக கர்ப்பமடைவதாகும்.

## தேவையற்ற கர்ப்பத்திற்கு உட்படக்கூடியவர்கள் யார்?

15இலிருந்து 50 வயதிற்குட்பட்ட அனைத்துப் பெண்களும்.

## தேவையற்ற கர்ப்பத்திற்கான காரணம்

- கருத்தடை முறையை உபயோகிக்காமை.
- கருத்தடை முறையை சரியாக உபயோகிக்காமை.
- கருத்தடை முறை பிழைத்தல்.

## ஏன் கருத்தடை முறை அவசியம்

- தாயின் ஆரோக்கியம் பேணுவதற்கு
- குழந்தைகளுக்கிடையே போதுமான கால இடைவெளிக்கு
- திட்டமிட்ட அளவான குடும்பத்திற்கு
- குறைபாடுடைய குழந்தை ஏற்படுவதை தவிர்த்தல்.

## கருத்தடை முறைகள்

### I. இயற்கை முறைகள்

கருத்தரிக்கக்கூடிய காலப்பகுதியில் பாலியல் பழக்கவழக்கங் களை மாற்றிக்கொள்வதன் மூலம் கர்ப்பம் தரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளும் முறைகளாகும்.

- யோனிவழித் தொடர்பைத் தவிர்த்தல்
- கலண்டர் முறை / கிரம முறை
- சுக்கிலப் பாய்மத்தை வெளியில் விடல்

## II. நவீன முறைகள்

(a) **தற்காலிக முறைகள்**

ஆணுறை, பெண்ணுறை, மாத்திரை, கர்ப்பத்தடை, ஊடு கருப்பை உட்சுருள் (IUCD)

**அவசர கர்ப்பத்தடை முறை**

- உடலுறவின் பின் 72 மணித்தியாலத்திற்குள் இரு மாத்திரைகள் எடுத்தல் வேண்டும்.
- முதலாவது மாத்திரையிலிருந்து 12 மணித்தியாலத்தில் 2வது மாத்திரை எடுத்தல் வேண்டும்.
- மிக விரைவில் முதலாம் மாத்திரையை எடுத்தல் சிறந்த பயனளிக்கும்.

(b) **நிரந்தர கர்ப்பத்தடை முறைகள்**

பெண்களுக்கான கருத்தடைச் சிகிச்சை (LRT)

ஆண் சத்திர சிகிச்சை (Vasectomy)

கருத்தடை முறைகள் தொடர்பான ஆலோசனைகளையும், சேவைகளையும், நம்பகத்தன்மையுடன் உங்கள் பகுதி குடும்ப நல உத்தியோகத்தர், பொது சுகாதாரப் பரிசோதகர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

# பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள்

- ❖ பாலியல் தொடர்பின்போது தொற்றடைந்த ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும் நோய்கள்.
- ❖ தொற்றடைந்த ஒருவருடன் யோனிவழி, குதவழி, வாய்க்குழி மூலம் பாலியல் தொடர்புகொள்வதால் இந்நோய்கள் பரவ இடமுண்டு.

## இந்த நோய்களால் ஏற்படும் பாதிப்புக்கள்

- உரிய சிகிச்சை பெறாவிட்டால் இந்நோய்கள் காரணமாக சிக்கல் நிலமைகள் ஏற்படலாம்.
    - ஆண், பெண் மலட்டுத்தன்மை
    - இதயம், மூளை, நரம்பு ஆகியவற்றில் தாக்கம்
- சில நோய்களில் நோய்க்குணங்குறிகள் மீண்டும், மீண்டும் தோன்றும்.
- சில நோய்க்கிருமிகள் பிரசவத்தின் போது தாயிடமிருந்து குழந்தைக்கு கடத்தப்படும்.

## இந்த நோய்கள் பரவும் ஆபத்தை ஏற்படுத்தும் பாலியல் நடத்தைகள்

- பலருடன் பாலியல் தொடர்புகளை வைத்திருத்தல்.
- தமது பாலியல் துணைவரை / துணைவியை அடிக்கடி மாற்றிக் கொள்ளல்.
- அறிமுகமற்றோருடன் பாலியல் தொடர்புகொள்ளல்.
- குடிபோதையில் இருக்கையில் பாலியல் தொடர்பு கொள்ளல்.
- பாலியல் சேவையில் ஈடுபடல்.
- பாலியல் சேவையில் ஈடுபடுவோருடன் பாலியல் தொடர்பு கொள்ளல்.

## நோய் குணங்குறிகள்

- பாலுறுப்புக்களில் புண்கள் ஏற்படல், கொப்பளங்கள் தோன்றல்.
- சிறுநீர் அழற்சி
- ஆணின் சிறுநீர் வழியினூடாக சீழ் வெண்ணிறத் திரவம் வெளியேறல்.

- ❖ யோனி மடலினூடாக அதிகளவில் பாயம் வெளியேறல்.
- ❖ பாலுறுப்பு உண்ணிகள்
- ❖ பெண்களின் அடிவயிற்றில் வலி ஏற்படல்

## நோய்க்குணங்குறிகள் காணப்பட்டால் செய்ய வேண்டியவை

- ❖ இயன்றளவு விரைவாக அருகிலுள்ள பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் கிளினிக்கில் அல்லது அருகேயுள்ள வைத்தியசாலை, வைத்தியர் ஒருவரிடம் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ நோய்க்குணங்குறிகள் வெளித்தெரியாவிட்டாலும் வைத்தியரின் ஆலோசனை குறித்த காலம்வரை சிகிச்சை பெறுங்கள்.
- ❖ மீண்டும் சோதிப்பதற்கான கிளினிக்குக்கு வரும்படி அறிவிக்கப்பட்ட தினத்தில் தவறாது கிளினிக்குக்குச் சென்று, உரிய சோதனைகளுக்கு உள்ளாகி, நோய் பூரணமாகக் குணமாகி உள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- ❖ பாலியல் துணைவரை / துணைவியை கிளினிக்குக்கு வழிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும்போது அவ்வாறு வழிப்படுத்துங்கள்.

**உரிய வகையில் *சிகிச்சை* பெறுவதன் மூலம் சில நோய்களை வெற்றிகரமாகக் குணப்படுத்தலாம்.**

**உதாரணம்: கோனோறியா, சிபிலிசு, கிளமிடியா தொற்றுக்கள்.**

**பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் எல்லாவற்றையும் இரத்த சோதனை மூலம் மாத்திரம் இனங்கண்டுவிட முடியாது. வெவ்வேறு நோய்களை இனங்காண்பதற்காக, வெவ்வேறு மாதிரிகளைச் சோதித்தல் வேண்டும்.**

**தவிர்த்திருத்தல்**

- ❖ பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்களில் (சமூக நோய்களில்) இருந்து தவிர்த்திருத்தல் வேண்டும்.
- ❖ நம்பிக்கையான ஒருவருடன் மாத்திரம் பாலியல் தொடர்புகளை வைத்திருத்தல்.
- ❖ எதிர்பாராதவகையில் சந்திப்போருடனும், அறிமுகமற்றோருடனும் ஒன்றுக்கு மேற்பட்டோருடன் பாலியல் தொடர்புகொள்வதைத் தவிர்த்தல்.
- ❖ ஒன்றுக்கு மேற்பட்டோருடன் பாலியல் தொடர்புகளில் ஈடுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரியான வகையில் பாதுகாப்பு ஆணுறை (கொண்டம்) ஒன்றை அணிதல்.

**பாலியல் மூலம் நடத்தப்படும் நோய்க்கான கிளினிக் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது**

**அறை இலக்கம் 33**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

*இங்கு நீங்கள் கூறும் தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும்.*


அனுசரணை:

ARUMUGAM TEXTILES

*Wholesale & Retail Textiles Merchants*

*No. 20, Grand Bazaar, Jaffna. ☎ 021-222 2740*



தயாரிப்பு:
சு. ரொசாந்தன் 2007/KM/41
அ. அரவிந்தன் 2007/FM/05
(30ம் அணி, மருத்துவபீடம்)



*A.K. Printers - Kokkuvil*




May 2011